செய்தி வெளியீடு எண்: 237 நாள்: 10.03.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (10.3.2019) தலைமைச் செயலகத்தில், சென்னை, காமராசர் சாலையில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான மெரினா வளாகத்தில் 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்கள்.

2018–19ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், தொல் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தை இயற்றிய புலவர் பெருந்தகை தொல்காப்பியரை நினைவு கூரும் வகையில் அவருக்கு சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான மெரினா வளாகத்தில் சிலை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை, காமராசர் சாலையில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான மெரினா வளாகத்தில் 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள வெண்கலத்தாலான ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப.,, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: **10.3.2019**